பதிவு எண்: ம. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்பி

மலர்: 16] சென்னை: ஆனி 8 (21—6—68) வெள்ளி ★ வெளியூர்: ஆனி 9 (22—6—68) சனி [இதழ்: 6

மொழிப் பிரச்சினை முழுவதையும் மறு ஆய்வு செய்க!

ஒருமைப்பாட்டின் பேரால் மாநில உரிமைகளை நசுக்கிவிட முடியாது

இந்தியை ஒருபோதும் ஆட்சிமொழியாக ஏற்கமாட்டோம்

ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் இரா. செழியன் முழக்கம்

ஸ்ரீநகர், ஜூன் 20—

இங்கு கூடிய தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட திரு. இரா. செழியன் அவர்கள், 'மொழிப் பிரச்சினையை மறு ஆய்வு செய்யவேண்டும்' என்று வற்புறுத்தினர்.

"இந்தி பேசாத மக்கள்மீது இந்தியை வலுக்கட்டாயமாகத் திணிப்பது தேசிய ஒருமைப்பாட்டுக்குக் குந்தகம் விளைவிக்கும்" என்று அவர் எச்சரித்தார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

"இந்தியா போன்ற ஒரு பெரிய நாட்டில், மாநிலங்களின் உரிமைகளை நசுக்குவதன் மூலம் ஒருமைப்பாட்டை உருவாக்கிவிட முடியாது.

"இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கு இப்போது ஆபத்து எதுவும் வந்துவிடவில்லை; நல்லமுறையில்தான் இருந்து வருகிறது.

"தற்போதுள்ள பிரச்சினைகளும் ஒன்றும் அவ்வளவு கடுமையானவையல்ல. மத்திய அரசுக்கும்—மாநில அரசுகளுக்குமிடையே ஒத்துப் போகின்ற தன்மையில் ஏற்படும் பிரச்சினைகளை பெரிதாக்கிக்கொள்ளக் கூடாது.

'சேனை'கள் அமைக்கப்படுவது குறித்தும் அவை இயங்கும் விதம் குறித்தும் உள்துறை அமைச்சு மிகவும் எச்சரிக்கையாகச் செயலாற்ற வேண்டும்.

"இப்படிப்பட்ட வகுப்புவாத அடிப்படையிலான அமைப்புகளையும், அனைத்துக் கட்சிகளையும் மத்திய அரசு ஒரு மாநாட்டில் கூட்டி, ஒரு ஒழுக்க விதியை வகுத்துக்கொள்ளச் செய்யவேண்டும். அத்தகைய ஒழுக்க விதிகள் சரிவரக் கடைபிடிக்கப்படவில்லையானல், அப்படிப்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

"ஒருமைப்பாட்டைப் பற்றி அதிகமாகப் பேசி இப்போதுள்ள நிலைமையைக் கெடுத்துவிட வேண்டாம்.

"தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், அங்கு எந்தவிதச் சாதி--மதச் சண்டைகளும் [illegible]யாது.

"விவாதம் நடத்தும்போது பொதுப்ப[illegible]பாகப் பேசாமல், குறி[illegible]சில பிரச்சினைகளைப் பேச வேண்டும்.

"முன்பு தமிழகத்திற்கு வந்திருந்தபோது, தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்களே, 'மொழிப் பிரச்சினையை மறு ஆய்வு செய்ய வேண்டும்' என்று கருத்தறிவித்துள்ளார். இப்போது மொழிப் பிரச்சினையை முழு அளவில் மறு ஆய்வு செய்ய வேண்டும் என்று தி. மு. கழகம் விரும்புகிறது.

"எந்த ஒரு வட்டார மொழியும் மற்ற மொழிகளை அடக்கியாளக்கூடாது. இந்தியை இந்த நாட்டின் ஆட்சிமொழியாக ஒரு நாளும் ஏற்கமுடியாது."

[இந்தக் கூட்டத்தில் தமிழக அரசின் பிரதிநிதியாக அமைச்சர் மாதவன் அவர்கள் கலந்துகொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது]

மதுவிலக்கு இழப்பீடு

பாதியை ஏற்க டில்லி விருப்பம்

ஜெய்ப்பூர், ஜூன் 21—

மதுவிலக்கைச் செயல்படுத்துவதால் மாநில அரசுகட்கு ஏற்படும் வருவாய் இழப்பில் பாதியை மத்திய அரசு ஐந்தாண்டுக் காலத்துக்கு ஏற்றுக்கொள்ள இப்போது விருப்பம் தெரிவித்துள்ளதாகத் தெரிகிறது.

அனைத்திந்திய மதுவிலக்குக் குழுப் பொதுச்செயலாளர் திரு. ரூப் நாராயணன் அவர்களுக்கு, துணைத் தலைமையமைச்சர் திரு. மொரார்ஜி தேசாய் எழுதியுள்ள கடிதத்தில் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்டோருக்கு 100 மூட்டை அரிசி

முதலமைச்சர் உத்தரவு

சென்னை, ஜூன் 21—

"முதலமைச்சர் அண்ணா அவர்கள், மேலும் 100 மூட்டை அரிசியை தீயினால் பாதிக்கப்பட்டோருக்கு உணவளிப்பதற்குப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொண்டு மாநகராட்சிக்கு அளித்திருக்கிறார்" என்று, மாநகராட்சி ஆணையர் அம்பாசங்கர் தெரிவித்திருக்கிறார்.

ஏற்கனவே உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் உத்தரவின் மீது 100 மூட்டைஅரிசி அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

தீ வைப்பு சம்பந்தமாக 364 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

கோதுமை அளவு அதிகரிக்கும்

சென்னை, ஜூன் 20—

சென்னை நகரில், பங்கீட்டு அட்டை வைத்திருக்கும் அனைவரும், அடுத்துவரும் வாரங்களில் அதிகப்படியான கோதுமையும் கோதுமையினலான பண்டங்களும் பெறுவர்.

கோதுமை—கோதுமைப் பண்டங்களின் இருப்பு நிலை சீரடைந்திருப்பதாகவும், உயர்ந்த ரகக் கோதுமை கையிருப்பில் உள்ளதாகவும், உணவு வழங்குதுறை ஆணையர் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு பங்கீட்டு அட்டைக்கும் மாதம் 10 கிலோ கிராம் கோதுமை வரை விற்க அரசினர் பங்கீட்டுக் கடைகளும், அதிகாரம் பெற்ற கூட்டுறவுச் சங்கங்களும் அனுமதிக்கப்பட்டிருப்பதாக அவர் கூறினர்.

மைதா, ரவை ஆகிய கோதுமைப் பண்டங்கள் 4 கிலோ கிராம் வரை விற்கலாம்.

பாகிஸ்தானுக்கு 'பேட்டன்' டாங்கிகள்

விற்கும் நோக்கம் எதுவும் பெல்ஜியத்துக்கு இல்லையாம்

பிரஸ்ஸல்ஸ், ஜூன், 20—

பாகிஸ்தானுக்கு இப்போது பேட்டன் டாங்கிகள் விற்கும் நோக்கம் எதுவும் பெல்ஜியத்துக்கு இல்லை என்று நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

'நாட்டோ' உபரி சேமிப்பிலிருந்து பாகிஸ்தானுக்கு 'பேட்டன்' டாங்கிகள் போன்ற இராணுவச் சாதனங்களை விற்க வேண்டாமென்று இந்திய அரசு பெல்ஜியத்தைக் கேட்டுக்கொண்டதை யடுத்த இத்தகவல் வெளியாகியிருக்கிறது.

பதிவு அஞ்சலுக்குப் புதிய உறை

புதுடில்லி, ஜூன் 22—

ஒரு ரூபாய் விலையுள்ள புதிய பதிவு அஞ்சல் உறை ஜூன் 20-ம் நாள் முதல் பொதுமக்களிடையே விற்பனைக்கு வெளியிடப்பட்டுள்ளது. இந்த ஒரு ரூபாயில் உறையின் விலையாகிய 10 காசும் அடங்கும்.

ஏற்னவே இருந்துவருகிற 85 காசு விலையுள்ள பதிவு அஞ்சல் உறைகள் கையிருப்புத் தீர்ந்து போவதுவரையில் கூடுதலாக 15 காசு அஞ்சல் தலை ஒட்டப்பட்டுத் தொடர்ந்து விற்பனை செய்யப்பட்டு வரும்.

இராணுவ ஆட்சி

மாஸ்கோ, ஜூன் 20—

திபேத்தின் தலைநகரான லாசாவில் இராணுவ ஆட்சி கொண்டுவரப்பட்டுள்ளதாம்.

அண்மையில் அங்கு பல மோதல்கள் ஏற்பட்டதையடுத்து இராணுவ ஆட்சி ஏற்பட்டுள்ளதாம்.

லாசாவின் பல பகுதிகளில் நடைபெற்ற மோதுதலில் 100 பேர்கள் வரையில் கொல்லப்பட்டிருப்பதாகத் தகவல் வெளியிடப்பட்டிருக்கிறது.

தமிழகத்தில் 15 புதிய உயர்நிலைப் பள்ளிகள்

துணைக் கருவிகளுக்காகத் துவக்கப் பள்ளிகளுக்கு ரூ. 4.90 இலட்சம்

சென்னை, ஜூன் 20—

தமிழகத்தில் 15 புதிய உயர்நிலைப் பள்ளிகளைத் திறக்கத் தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்தப் பள்ளிகள் அனைத்தும் மாவட்டங்களிலேயே இருக்கும்.

சென்னை நகரில் உள்ள இரண்டு உயர்நிலைப் பள்ளிகளை மேலும் விரிவுபடுத்த அரசு இசைவளித்துள்ளது.

இதன்படி, அடையாறு அருகில் உள்ள ஊரூர் அரசினர் பள்ளியும், பெரம்பூரில் உள்ள தனியார் பள்ளியொன்றும் விரிவாக்கப்படும்.

மாநகராட்சி, புதிய உயர்நிலைப் பள்ளி எதுவும் திறக்க அரசிடம் அனுமதி கோரவில்லை என்று கூறப்படுகிறது.

800 துவக்கப் பள்ளிகளுக்கும், 250 உயர் துவக்கப் பள்ளிகளுக்கும், கல்வி கற்பிப்பதற்கான துணைக் கருவிகள் வாங்கிக் கொள்வதற்காக அரசு ரூ. 4.90 இலட்சம் வரை வழங்க அனுமதித்திருக்கிறது

இத்தொகையில் ஒவ்வொரு துவக்கப் பள்ளியும் ரூ. 300 வீதமும், ஒவ்வொரு உயர் துவக்கப் பள்ளியும் ரூ. 1,000 வீதமும் 1968-69-ல் பெறும்.

இந்தி வெறியருக்கு எச்சரிக்கை!

ஸ்ரீநகர், ஜூன் 20—

ஒருமைப்பாட்டுக் குழுவின் இன்றையக் கூட்டத்தில் மொழிப் பிரச்சினையும் முக்கிய இடம் பெற்றது.

"இப்பிரச்சினையில், வடநாட்டுக்கும்-தென்னாட்டுக்குமிடை ஏற்பட்டுள்ள பெரும்பிளவைச் சந்தித்தாக வேண்டும்.

"இந்தி வெறியர்கள், தென்னாட்டு மக்கள் மீது இந்தியைத் திணிப்பதை அறவே கைவிட வேண்டும்"

என்று இந்தியத் தலைமை நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி கஜேந்திர கட்கார் கடுமையாக எச்சரித்தார்.

மூடப்பட்ட ஆலைகளைத் திறக்கும் பிரச்சினை

பேராசிரியர் கிருஷ்ணமூர்த்தி தலைமையில் ஆய்வுக் குழு

21-ஆலைகள் தொடர்பாகவும் ஆராயத் தமிழக அரசு வற்புறுத்தல்

சென்னை, ஜூன் 21—

கோவை மாவட்டத்தில் மூடப்பட்ட 6 ஆலைகளின் பிரச்சினைகளை ஆராய்வதற்காக மத்திய அரசு, குழு ஒன்றை அமைத்திருக்கிறது.

சென்னை அழகப்பா தொழில் நுட்பக் கல்லூரிப் பேராசிரியர் திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி, இக்குழுவின் தலைவராவார்.

தமிழகத் தொழில் துறை அதிகாரி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

"தமிழகத்தில் மூடப்பட்ட ஆலைகளைப் பற்றிய பிரச்சினைகளை ஆராய்வதற்காக மத்திய அரசு மேலும் ஒரிரு குழுக்களை நியமிக்கும் உத்தரவுகளை இவ்வார இறுதியில் பிறப்பிக்கலாம்" என்று அவர் கூறினர்.

'மாநிலத்தில் மூடப்பட்ட 21 ஆலைகளின் பிரச்சினைகளையும், தொழில் வளர்ச்சி—ஒழுங்குச் சட்டத்தின்கீழ் ஆராயவேண்டும்" என்று தமிழக அரசு, மத்திய அரசுக்குச் சிபாரிசு செய்துள்ளது.

அண்ணா ஆட்சியில் என்ன குறை கண்டீர்?

பக்தவத்சலம் காலத்தைவிட விலைகள் குறையவில்லையா?

வெங்கட்ராமன் காலத்தைவிட உற்பத்தி பெருகவில்லையா?

புள்ளிவிவரம் காட்டியும் காங்கிரசாரின் புளுகுப் பிரசாரம்-- அமைச்சர் நெடுஞ்செழியன் கண்டனம்

"காங்கிரசு ஆட்சியில் இருந்ததைவிடக் கழக ஆட்சியில் விலைவாசிகள் இறங்கியிருக்கின்றன. மிளகாய் வற்றல், துவரம் பருப்பு, கடுகு, புளி, கடலை எண்ணெய், நல்லெண்ணெய் மற்றும் பல பொருள்களின் விலைகள் குறைந்திருக்கின்றன.

"வெங்கட்ராமன் காலத்தில் இருந்ததைவிடப் பல பொருட்களின் உற்பத்தி, அறிஞர் அண்ணா அவர்களின் ஆட்சியில் அதிகம்!

"இப்படியிருக்கையில் 'தி.மு. கழக ஆட்சியில் தொழில் உற்பத்தி இல்லை' எனக் கூசாமல் காங்கிரசார் பொய்ப் பிரச்சாரம் செய்கின்றனர்!

"சென்ற ஆண்டில் 11 கல்லூரிகள் திறக்கப்பட்டன; 67 புதிய உயர்நிலைப் பள்ளிகள் திறக்கப்பட்டன; இவ்வாண்டில் 12 கல்லூரிகள் திறக்கப்படவிருக்கின்றன; ஆனால் 'புதிதாகப் பள்ளிகள் இல்லை - கல்லூரிகள் இல்லை' என்று காமராசர் பேசிவருகிறார்!"

என்று, கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தென்காசியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரப் பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசியதாவது :—

ஞாயிறு போற்றுதும்!

வருகிற ஜூலை 3-ம் நாள் நடைபெறும் தேர்தலில் தகுதிமிக்கதோர் பிரதிநிதியை 80,000 வாக்காளர்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்.

தி. மு. கழக வேட்பாளர் கதிரவன், தேர்தல் காலத்தில் மட்டும் தலையை நீட்டுபவரல்லர்; தொகுதி மக்களுக்காகப் பல ஆண்டுகளாகத் தொண்டாற்றி வருபவர், இன்று தோழமைக் கட்சிகளின் ஆதரவுடன் தேர்தலுக்கு நிற்கிறார்.

இளங்கோ அடிகள் 'ஞாயிறு போற்றுதும்' என்று சொன்னார்; அதைப்போல, கதிரவனுக்காகக் கதிரவன் (உதய சூரியன்) சின்னத்தில் இந்தத் தேர்தலில் வாக்களிக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்று இந்த நிலை!

காங்கிரசு ஆட்சியில் தமிழகச் சட்டமன்றத்தில் 50 அல்லது 60 பேர்கள்தான் பேசுவார்கள்; 100 பேர் பேசுவதே இல்லை; ஆனால் தி. மு. கழக எம்.எல்.ஏ.-க்கள் மட்டுமல்லாமல், தோழமைக் கட்சி எம்.எல்.ஏ.-க்களும் இப்போது சட்டமன்ற விவாதத்தில் பேசுகின்றார்கள்.

நிலை என்ன பாரீர்!

காமராசரும், சுப்பிரமணியமும், கழகத்தை இழித்தும் பழித்தும் பேசுகிறார்கள்!

'ஆளுகின்ற மூஞ்சியைப் பார்' என்று 1967 பொதுத் தேர்தலில் பேசிய காமராசரின் சொந்த ஊரான விருதுநகரில், அவர் முகத்தைப் பார்க்க மக்கள் மறுத்துவிட்டார்கள்!

ஆனால், அறிஞர் அண்ணா அவர்களின் முகத்தை அமெரிக்காவில் யேல் பல்கலைக் கழகம் பார்த்தது!

அன்று அப்படிப் பேசிய காமராசர் கதியே இப்படியென்றால் அப்படி இன்று பேசும் சுப்பிரமணியத்தின் கதி என்ன ஆகும்?

பொள்ளாச்சியில், 'உடுமலை நாராயணன் என்ன—வைகுந்த நாராயணனே வந்தாலும் என்னைத் தோற்கடிக்க முடியாது' என்று சவால் விட்டார் சுப்பிரமணியம்! பாவம்! பரிதாபமாகத் தோற்றார்!

ஆதரவு நமக்கு!

தென்காசித் தொகுதியில், 1967 பொதுத் தேர்தலைவிட தி. மு. கழகம் இப்போது வலிவுடையதாக இருக்கிறது.

முன்பைவிட வலதுசாரி கம்யூனிஸ்டுக் கட்சியினரும், பெரியாரும் இப்போது நம்மை ஆதரிக்கிறார்கள்.

அன்றும் இன்றும்?

எப்படிப்பட்ட சூழ்நிலையில் பக்தவத்சலம் ஆட்சியை விட்டுப் போனார்!

தொழில் நுணுக்கப் புகுமுக வகுப்பு

பயன் குறித்து இயக்குநர் விளக்கம்

'பிரீ டெக்னிகல்' என்னும் தொழில் நுணுக்கப் புகுமுக வகுப்பு (அதாவது பாலிடெக்னிக்கில் முதல் ஆண்டுப் படிப்பு) எவ்வாறு பல விதங்களில் சிறந்தது என்பதை தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் டி. முத்தையன் விளக்கினார்.

'விஞ்ஞானப் பிரிவுகளில் பட்டம் பெற விரும்புபவர்களுக்கு, இது மிகவும் ஏற்றது' என்றார் அவர்.

படிப்பின் தரத்திலும் சரி—அங்கீகாரத்திலும் சரி—'பிரீ டெக்னிகல்' படிப்பு பி. யு. சி.-க்குச் சமமாகும்.

'பிரீ டெக்னிகல்' வகுப்பில் தேறியவர்கள் பி. எஸ்சி.-க்குப் போகலாம். அல்லது பி.இ.-க்கு (பொறியியல் பட்டம்) போகலாம்; இல்லையென்றால், பாலிடெக்னிக்குகளிலேயே உள்ள 'டிப்ளமா' வகுப்புகளில் தொடர்ந்து படிக்கலாம்.

இதைத் தவிர, பி.ஏ. வகுப்பிலும் சேர்ந்து படிக்கலாம்.

'பிரீ டெக்னிக்'கில் படிப்பின் மற்றொரு சிறப்பு என்னவென்றால், ஆங்கிலம் மட்டுமே இதற்குப் பயிற்று மொழியாகும்.

இந்தப் படிப்பின் முக்கியத்துவத்தை மாணவர்களும், பெற்றோர்களும் விரைவில் உணர்வர் என்று தாம் உறுதியாக நம்புவதாக திரு. முத்தையன் கூறினார்.

---

15 மாத காலத்தில் தி. மு. கழக ஆட்சியின் சூழ்நிலை என்ன என்பதை மக்கள் பார்க்கவேண்டும்.

பக்தவத்சலம் ஆட்சியில் திங்கட்கிழமை ஓட்டலில் சோறு கிடையாது. 'வியாழக்கிழமை சோறு போடாதீர்கள்' என்று பக்தவத்சலம் பேசினார்!

பக்தவத்சலம் ஆட்சியில் உயர்ந்த அரிசியின் விலை, அறிஞர் அண்ணா ஆட்சியில் குறைந்திருக்கிறது!

அரிசி அமோகமாக விளையும் ஆந்திரத்தை விடத் தமிழ்நாட்டில் பல ஊர்களில் அரிசி விலை குறைந்திருக்கிறது.

அண்ணா ஆட்சியில், 'படி அரிசி எங்கே?' என்று காங்கிரசார் பானையைக் காட்டிக் கேட்கிறார்கள்.

(5-ம் பத்தி பார்க்க)

தென்காசி வாரீர் திரண்டு!

வட்டக் கழகத்தின் அன்பழைப்பு

தென்காசித் தொகுதிச் சட்டமன்ற இடைத் தேர்தலில் கழகம் வெற்றி வாகை சூடிட, ஆங்காங்குள்ள கழகத் தோழர்கள் திரண்டு வந்து பணியாற்றுமாறு தென்காசி வட்டச் செயலாளர் அ. இராமநாதன் கேட்டுக்கொண்டுள்ளார்.

வட்டக் கழகச் சார்பில் அவர் விடுத்துள்ள வேண்டுகோளில் தெரிவித்திருப்பதாவது :—

"வருகிற 3—7—68 அன்று நடைபெறவிருக்கும் இடைத் தேர்தலில் நமது கழகச் சார்பில் நண்பர் கதிரவன் போட்டியிடுகிறார்.

"காங்கிரசின் பேரால் அவரை எதிர்த்து, வகுப்புவாதமும், பணமும், வன்செயல்களும் போட்டியிடுகின்றன.

"சென்ற பொதுத் தேர்தலில் சில நூறு வாக்குகளே குறைந்து நாம் பெற்ற வாய்ப்பை இழக்க நேரிட்டது.

"இந்த முறை இத்தொகுதியைக் கைப்பற்ற, கழகத் தோழர்கள் தங்கள் நேரம்--நினைப்பு--உழைப்பு அனைத்தையும் செலவிட்டாகவேண்டும்.

"அனைவரும் தென்காசி நோக்கி வந்து பணியாற்றுவதுடன், நிதியுதவியும் அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்."

காங்கிரசுப் பெரியவர்கள் செய்யவேண்டியது என்ன?

கழக ஆட்சியின் சாதனை கண்டு காமராசர் வெட்கப்படவேண்டாமா?

அமைதியும் நன்னெறியும் தழைக்க அறிஞர் அண்ணா விரும்புகிறார்

ஏர்வாடியில் பேராசிரியர் க. அன்பழகன் விளக்கம்

ஏர்வாடி, ஜூன் 20—

"சனநாயகத்தின் அடிப்படையில் ஒரு கட்சி ஐந்தாண்டுக் காலம் ஆட்சி செய்த பின்னர், அந்தக் கட்சியின் சாதனை பற்றி கேட்பதுதான் முறையானதாகும்.

"பானையை அடுப்பில் ஏற்றி அரிசி அரைகுறையாக வெந்துகொண்டிருக்கையில், 'சூடேறிவிட்டதா' என்று பானையைத் திறந்து சோற்றைப் பதம் பார்த்தால், நறுக்கு அரிசியாகத்தானே இருக்கும்?

"அதுபோல், கழகம் தனது ஆட்சியைச் செலுத்தி—மேடு பள்ளங்களைச் செம்மைப்படுத்தி நிர்வாகத் துறையில் சரியான ஒரு வழியைப் பின்பற்றி வரும்போதே சாதனையைப் பற்றிக் கேட்பது எந்த முறையில் நியாயமானது?"

என்று பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், ஏர்வாடி தி. மு. க. சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டி வினவினார். அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

மக்கட்குத் தெரியாதா?

இருபதாண்டுக்கால ஆட்சியில், தாய்நாடாம் தமிழகத்துக்கு, 'தமிழ்நாடு' என்று பெயர் வைக்கக்கூடத் திராணியற்றவர்கள், இன்று, 'கழகத்தின் சாதனை என்ன?' என்று கேட்கிறார்கள்.

கழக ஆட்சி, பதினைந்து [illegible]களில் சாதித்துள்ள [illegible] சாதனைகளை மக்கள் புரிந்து கொண்டிருக்[illegible]னர்.

மக்களிடம் மறு[illegible] வாக்குக் கேட்பதற்கு நாங்கள் செல்லும் போது—மக்களே கேட்கும் போது—கழகத்தின் சாதனையை மக்கள்முன்பு வைக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்; ஆனால், அதுபற்றிக் கேட்கக் காங்கிரசுக்காரர்களுக்கு என்ன தகுதி இருக்கிறது?

மக்களே பார்த்து எங்களை ஆட்சியில் அமரச் செய்திருக்கும் போது, காங்கிரசுக்காரர்கள் மட்டும் ஏன் பொருமைப்பட்டுப் பயன் என்ன?

பொருமுவதால் பயன்?

தமிழகத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் முதல் அமைச்சராகப் பொறுப்பு ஏற்று நடத்திவரும் நல்லாட்சியைக் கண்டு பேராசிரியர் என்.ஜி. ரங்கா, எம்.ஆர். மசானி, மத்திய அமைச்சர்கள் சவாண், செகசீவன்ராம் போன்றோர்கள் பாராட்டிவருகிறார்கள்.

'நாங்கள் திட்டுகிறோம் -- நீங்கள் ஏன் பாராட்டுகிறீர்கள்' என்று இங்குள்ள காங்கிரசுத் தலைவர்கள் பொருமுவதால் பயனென்ன?

கல்வி வளர்ச்சியில் கழக அரசின் சாதனை

[illegible]கிரசு ஆட்சி நடந்தபோது ரூ. 25-கோடி செலவில் நடந்த கல்வித் துறை, 20-ஆண்டுக் காலத்து வளர்ச்சியில் ரூ 45 கோடியாக உயர்ந்தது.

அறிஞர் அண்ணா முதல் அமைச்சராகப் பதவியேற்ற பதினைந்து திங்களுக்குள் அது, ரூ. 55-கோடியாக உயரவில்லையா?

'தி. மு. கழகத்தினர் பள்ளிகளை மூடிவிடுவார்கள் என்றால், காமராசர் பெரிய படிப்பு படித்தவர் போலும், அறிஞர் அண்ணா படிக்காதவர் போலும் நினைத்துப் பேசுவதுபோல் இல்லையா?

அல்லது, கழகத்தில் படித்தவர்களும், பட்டதாரிகளும் குறைவு என்று அதிகாரிகள் புள்ளி விவரங்கள் தந்தார்களா?

மோதுகிறது காங்கிரசு!

இப்பொழுது டானைகளைக் கட்டிவிட்டு--கறுப்புக் கொடி பிடிக்கிறார்கள். கறுப்புக் கொடி ஏன் பிடிக்கிறார்கள்? எதிர்க்கட்சியாக நாங்களும் இருக்கிறோம் என்பதைக் காட்டவா? குடை பிடித்துக்கொண்டு போனால் சில மாடுகள் முட்ட வரும்: அதுபோலவே கழகத்தவர்களைக் கண்டால் காங்கிரசுக்காரர்கள் மோத வருவது ஏன்?

பேராவூரணியில் பொதுப் பணி அமைச்சரைத் தாக்க காங்கிரசுக்காரர்கள் வெறியாட்டம் நடத்தியதை கண்டு காங்கிரசுக் கட்சியின் மேலிடமும், பெருந்தலைவர்கள் என்பவர்களும் கண்டித்து அறிக்கை விட்டார்களா?

இதுபோன்ற ஒரு சம்பவம் பக்தவத்சலம் காலத்தில் நடந்திருந்தால், துப்பாக்கிக் குண்டுகள், பல உயிர்களைக் குடித்து இருக்குமே!

சட்டம்—ஒழுங்கு — அமைதி கெட்டுவிட்டது' என்று கூப்பாடு போடுகின்றவர்கள் சட்டம்—ஒழுங்கை நிலை நிறுத்தவா செய்கின்றனர்?

காங்கிரசுக்காரர்கள் ஆட்சியின் போது இருந்த போலீசுக்காரர்கள்தானே இப்பொழுதும் இருக்கிறார்கள்; அவர்களை நாங்கள் ஏவிவிட முடியாதா என்ன?

நாட்டில் அமைதியும் நன்னெறியும் தழைக்கவேண்டும் என்று அறிஞர் அண்ணா விரும்புகிறார்.

மத்திய அமைச்சர் பாராட்டு கண்டு காமராசர் போன்ற பெருந்தலைவர்கள் வெட்கப்படவேண்டும்"

கூட்டத்தில் சட்டமன்ற கழக உறுப்பினர் எட்மண்டு, என். பி. எம். அப்துல்காதர், அலி சேக் மன்சூர், ஏர்வை அப்துல் காதர், மற்றும் பலர் பேசினர்.

(3-ம் பத்தி தொடர்ச்சி)

அண்ணா அவர்களாவது 40 இலட்சம் பேருக்கு ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுகிறார்; தமிழக அரசு மூலம் எட்டுக் கோடி ரூபாய் அதற்காகத் தரப்படுகிறது.

டெல்லி அரசிடம், 'பத்துக்கோடி ரூபாய் தாருங்கள்; எல்லோருக்கும் ரூபாய்க்குப் படி அரிசி போடுகிறோம்' என்று அண்ணா கேட்கிறார்!

எங்களிடம் காங்கிரசார் காட்டும் பானையை, டில்லியிடம் நாங்கள் காட்ட முடியுமா?

டில்லி அமைச்சர்கள் வரும் போது, படி அரிசி கேட்டுக் காங்கிரசாரே பானையைக் காட்டட்டும்! செய்வார்களா காங்கிரசார்!

ஒரு ஏழைக் குடும்பம் தன் வருமானத்தில் 65 சதவீதம் அரிசிக்காகச் செலவு செய்யும்போது, காங்கிரசார் இந்தத் திட்டத்திற்கு உதவி செய்யக்கூடாதா?

கோதுமைக்கு ரூ. 118 கோடி மானியம் தரப்பட்டது. அரிசி சாப்பிடுகிறவன், கோதுமை சாப்பிடுகிறவனைவிடக் கேவலமானவனா?

மத்திய அரசு பணம் கொடுக்காவிட்டாலும், தமிழக அரசு, திட்டத்தைக் கைவிடவில்லை!"

கோவை ஸ்டேன்ஸ் மில் கதவடைப்பு

தொழிலாளர்கள் ஒத்துழைத்தும் நிர்வாகத்தின் நியாய விரோதச் செயல்

கோவை மாவட்டத்தில் உள்ள ஸ்டேன்ஸ் மில், 18—6—68 அன்று கதவடைப்பு செய்யப்பட்டது. இந்த மில்லில் சுமார் 2000 தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர்.

கடந்த சனவரித் திங்களிலிருந்து தொழிலாளர்களுக்கு சரியான முறையில் சம்பளம் கொடுப்பது கிடையாது. மூன்று மாதச் சம்பளம் இதுவரையில் தரப்படவில்லை. கூட்டுறவுப் பண்டகச் சாலைக்கு ரூ. 1½ இலட்சம் கட்டப்பட வேண்டும் கூட்டுறவு பாங்கிக்கு ரூ. 88 ஆயிரம் கட்ட வேண்டும் இது போக, தொழிலாளர்களுக்கு 'லே-ஆப்' சம்பளம் ரூ. 45,000 தரப்படவேண்டும்.

தொழிலாளர்களின் டெபாசிட் தொகையாக ரூ. 1¼ இலட்சம் கொடுக்கப்பட வேண்டும்

நிர்வாகத்தினர் மேற்கண்ட தொகையில் தொழிலாளர்களுக்கு இன்னும் எதுவும் தரவில்லை.

தொழிலாளர்கள் நல்ல முறையில் ஒத்துழைப்புக் கொடுத்தும் நிர்வாகத்தினர் 18—6—68-ல் கதவடைப்புச் செய்தனர்.

இந்தக் கதவடைப்பு சட்டத்திற்கும், நியாயத்திற்கும் புறம்பானதாகும். இது சம்பந்தமாக கோவை மாவட்ட திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் சார்பில் தொழில் அமைச்சருக்கும், தொழிலாளர் நலத் துறை அமைச்சருக்கும், லேபர் கமிஷனருக்கும் தாவல் அனுப்பப்பட்டுள்ளது.

முதலமைச்சருக்குத் தந்தி கொடுக்கப்பட்டிருக்கிறது.

அண்ணாவுடன் சந்திப்பு

சென்னை, ஜுன் 21—

கோவை திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்ற சங்கத் தலைவர் காடூர் கோபால், மைக்கேல்சாமி, நாராயணசாமி, தேவராசன், மற்றும் பலர் நேற்று முதலமைச்சர் அண்ணா, தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் மற்றும் அதிகாரிகளைச் சந்தித்து மூடப்பட்டுவிட்ட ஸ்டேன்ஸ் ஆலையை மீண்டும் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்டனர்.

"ஆலை மூடப்பட்டது பற்றி ஜுன் 26-ம் நாளன்று சென்னையில் விசாரணை நடைபெறும்" என்று தொழிலாளர் துணைக் கமிஷனர் தெரிவித்தார். இந்த விசாரணையில் ஆலை நிர்வாகிகளும், தொழிலாளர் பிரதிநிதிகளும் கலந்து கொள்வர்.

நெடுங்காடு போலீசாரின் வரம்புமீறிய செயல்

காவல் துறை அதிகாரியிடம் புதுவை வட்டச் செயலாளர் முறையீடு

புதுவை, ஜுன் 18—

காரைப் பகுதி நெடுங்காடு கிராமத்தில் காவல் துறையினர் செய்த வரம்புமீறிய செயலைக் கேள்வியுற்ற புதுவை வட்டத் தி. மு. க. செயலாளர் எம். ஏ. சண்முகம், வழக்கறிஞர் சி. பி. திருநாவுக்கரசும் புதுவை ஐ. ஜி. அவர்களை நேரில் சந்தித்து, இதுபற்றி விசாரணை நடத்தவேண்டும் என்றும், இனி இத்தகைய இழிசெயலில் காவல் துறையினர் ஈடுபடாதிருக்கச் செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு மனு ஒன்றும் கொடுத்தனர். ஆவன செய்வதாக ஐ ஜி. கூறினர்.

பாபுநகர் திராவிட முற்போக்கு கலைக் குழு

ஆமதாபாத்—பாபுநகர் திராவிட முற்போக்குக் கலைக் குழு நிர்வாகிகள் தேர்தல், 12—5—68 அன்று வட்டச் செயலாளர் சுந்த[illegible]குப்புசாமி அவர்களை ஆணையாளராகக் கொண்டு தேர்தல் நடைபெற்றது; அதுபோது, தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் :—

தலைவர் : எஸ். பாண்டுரங்கன் ; செயலாளர் : ஆ. கோபால் ; துணைச்செயலாளர் : வே. இராமு ; பொருளாளர் : கோ. கோபால் ; செயற்குழு உறுப்பினர் : சுந்தர் குப்புசாமி, கோ. பொன்னுசாமி, எஸ் செல்வராசு, ஆ. கோதண்டபாணி, தி. கோ. திருவேங்கடம், தி. சு. சு. காளத்தி, என். பி இலக்குமணன்.

ஒழுக்க நெறியை மீறுவது முறையா ?

விஷமத்தனமான செயல்களில் ஈடுபடுவது நேர்மையா ?

பிகிங் போக்கு: இந்திய அரசின் கடும் கண்டனம்

புதுடில்லி, ஜுன் 20—

"இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்களில் சீன அரசு தலையிட்டுவருவதால், ஏற்படும் விளைவுகளுக்கு அவர்களே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும்"

என்று இந்திய அரசு, செஞ்சீன அரசை எச்சரித்திருக்கிறது.

இந்தியாவிலுள்ள சீனத் தூதர் அலுவலகப் பிரதிநிதியிடம் தரப்பட்டுள்ள எதிர்ப்புக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது :—

"இந்தியாவின் சட்டப்பூர்வமான அரசாங்கத்தை எதிர்த்துக் கலகம் செய்வதற்காக நாகாலாந்து கலகக்காரர்களைச் சீனாவுக்கு இரகசியமாக அழைத்துச் சென்று அவர்களுக்குச் சீன அரசு பயிற்சியளிக்கிறது. பிறகு அவர்கள் நாகாலாந்துக்குத் திரும்புகின்றனர். அவர்களுக்குச் சீன அரசினர் ஆயுதங்களும் கொடுத்து உதவுகின்றனர். இதற்கெல்லாம் மறுக்க இயலாத சான்றுகள் கிடைத்துள்ளன. அப்படியிருந்தும் சீன அரசின் பிரச்சார நிறுவனங்கள் சிறிதும் அவமானமின்றித் தமது கொடிய விஷமத்தனமான செயல்களில் ஈடுபட்டிருக்கின்றன.

'அனைத்து நாட்டுச் சட்டங்களையும் ஒழுக்க நெறியையும் காற்றில் பறக்கவிட்டு, இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்களில் சீனா தலையிட்டுவருகிறது. இந்தியாவின் சுதந்தரத்தையும் சீனா தாக்கிவருகிறது. இவை அலட்சி[illegible] செய்யமுடியாத கடுமை[illegible] பிரச்சினைகளாகும்."

நெய்வேலியில் நலத்துறை அமைச்சர்

கழக அரசின் சாதனைகள் பற்றி விளக்கம்

15—6—68-ல் நெய்வேலி (1-3) தி. மு. க. சார்பில், திரு. வி. க. திடலில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. திரு. டி. இராசமாணிக்கம் தலைமை தாங்கினர்

பன்ருட்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எஸ். இராமச்சந்திரன், நெய்வேலி தி. மு. க. செயலாளர் திரு. பி வி சீனிவாசன், தொழிலாளர் முன்னேற்ற சங்க செயலாளர் எஸ். ஆண்டகுருநாதன், மற்றும் டி. இராமசாமி, அரங்கஅருள், இராசவேலு ஆகியோரும் கழகத்தின் சாதனைகளை விளக்கிச் சொற்பொழிவாற்றினர்.

இறுதியில், நலத்துறை அமைச்சர் எஸ். ஜே சாதிகபாட்சா அவர்கள், கழக ஆட்சியின் சாதனைகளை விளக்கி விரிவுரையாற்றினர்.

தொழிற்சங்கச் செய்திகள்

கோவை மாவட்ட தி. ப. தொ. மு. சங்கம்

பவர் -லூம்ஸ் தொழிலாளர் துணைக் குழு அமைப்பு

கோவை மாவட்டம் வெள்ளக்கோவில் பகுதியிலுள்ள பவர்—லூம்ஸ் தொழிற்சாலையில் பணியாற்றும் தொழிலாளர்கள், கோவை மாவட்டத் திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தில் உறுப்பினர்களாகச் சேர்ந்தனர்.

16—6—68 அன்று பவர்-லூம்ஸ் தொழிலாளர் கூட்டம் நடைபெற்றது; அதுபோது தலைமைச் சங்கச் செயலாளர் பி. கருப்புசாமி சங்க நடவடிக்கைகள்பற்றி விளக்கிப் பேசினர்.

பின், நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

தலைவர் : ஆர். கருப்புசாமி ; செயலாளர் : கே. எஸ். தண்டபாணி ; துணைச்செயலாளர் : எம் கந்தசாமி ; பொருளாளர் : பழனிசாமி ; மாவட்டப் பிரதிநிதி : ந. இராமசாமி ; மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் 7-பேர்.

கேன்டீன் தேர்தலில் வெற்றி

ஒத்தக்கால் மண்டபத்தில் உள்ள பிரிமியர் 'பி மில்லில் நடைபெற்ற கேன்டீன் தேர்தலில் தி மு. க. தொழிற்சங்கத் தொழிலாளர்கள் வெற்றிபெற்றனர்.

3-இடங்களுக்கு 17—6—68-ல் நடைபெற்ற தேர்தலில், தி ப தொ. மு சங்கச் சார்பில் மூன்று பேர்களும், ஐ.என்.டி.யு.சி. சங்கச் சார்பில் மூன்றுபேர்களும் போட்டியிட்டனர்.

தேர்தலில் அதிகமான ஓட்டுகள் பெற்றுத் தி.ப தொ.மு. சங்கம் வெற்றிபெற்றது.

வெற்றிபெற்றவர்கள்: கணபதி, பழனியப்பன், மங்கம்மாள்.

ஐ.என்.டி யு.சி. சங்கத்தின் சார்பில் போட்டியிட்டவர்கள், மிகக் குறைந்த ஓட்டுக்கள் வாங்கி தோற்றனர்.

லாட்டரிமூலம் நிதி திரட்டல்

கருநாடக அரசும் ஆராய்கிறது

பெங்களூர், ஜுன் 20—

கருநாடக மாநில அரசும் லாட்டரிச் சீட்டு மூலம் பணம் திரட்டுவது பற்றிய திட்டத்தைப் பரிசீலித்து வருவதாகத் தெரிகிறது.

கருநாடக அரசின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களையும் நிறைவேற்றுவதற்கான நிதி வசதியைத் திரட்ட, லாட்டரிச் சீட்டு நடத்தலாம் எனக் கருதியுள்ளது.

அண்டை மாநிலமான கேரளத்[illegible] இதேபோல் லாட்டரிச் சீட்டு நட[illegible]ம் திட்டம் ஏற்கனவே செயல்படு[illegible]பட்டு வருகிறது.

த[illegible]ம் லாட்டரிச் சீட்டு மூல[illegible] நிதி [illegible]சதியைத் திரட்ட ஏற்கனவே திட்டமிட்டு வருவது தெரிந்ததே.

திருமண வரவேற்பு

குடந்தை 13-வது வட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர் துரை நாகராசனுக்கும்—தேழியர் சாந்தாவுக்கும் 7—6—68 அன்று ஆரணியில் திருமணம் நடைபெற்றதையடுத்து, 8-6-68 அன்று குடந்தையில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

நகரக் கழகத் துணைச்செயலாளர் கு. வீராசாமி தலைமையில் எஸ் ஆர். இராதா எம்.சி., ஆர். பழனிச்சாமி, ஆசிரியர் முகதா, இரா. முருகேசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 5 அன்பளிப்பாக வழங்கப்பட்டது. [அன்பளிப்பு வரப்பெற்றோம்—நன்றி -- பொறுப்பாளர்.]

கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட்,
முங்கில்துறைப்பட்டு, (வழி) சங்கராபுரம்,
தென் ஆற்காடு மாவட்டம்

விற்பனைக்கு

சுமார் 400 டன் எடையுள்ள 6 அங்குலம் முதல் 10 அங்குலம் வரை அகலமும் 2 அடி முதல் 2½ அடிவரை நீளமுமுள்ள ஜாதிக் கட்டைகள் விற்பனைக்கு உள்ளன.

தேவைப்படுவோர் சீலிட்ட கவர்களில் 30—6—68-ந் தேதிக்குள் தங்களுடைய விலை விவரத்தைக் குறித்து அனுப்பவும்.

டெண்டரை காரணம் காட்டாமல் நிராகரிக்க ஆலையாருக்கு உரிமை உண்டு. மேற்படி விறகை ஆலையின் வேலை நேரத்தில் வந்து பார்வையிடலாம்.

(ஒ-ம்) என். சீனிவாசன், பி.ஏ.
பொது நிர்வாகி

ஐந்தே பேர்களால் இயங்கும் மாபெரும் ஆலை!

ஐரோப்பாவிலேயே மிகப் பெரியதும் புதுமையான பல வசதிகளைக் கொண்டதுமான நவீன ரக சாராய வடிப்பாலை மேற்கு ஜெர்மனியில் உள்ள பிராங்க்பர்ட்டில் அண்மையில் துவக்கப்பட்டது.

15 இலட்சம் ஹெக்டேர் லிட்டர் சாராயத்தைத் தயாரிக்கவல்ல இந்தப் பிரம்மாண்டமான வடிப்பாலையைக் கவனித்துக்கொள்ள ஐந்தே பேர்கள்தான் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

ஏனென்றால், சாராயம் தயாரிப்பதற்கான எல்லா வேலைகளையும் தானாக இயங்கும் இயந்திரங்களே செய்து முடித்துவிடுகின்றன!

பட்டுக்கோட்டை அண்ணா படிப்பகம்

12—6—68-ல் நடைபெற்ற மேற்படி உறுப்பினர் கூட்டம் திரு. கே. எஸ் சிவராமகிருட்டிணன் தலைமையில் நடைபெற்றபோது, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் ; விவரம் :—

தலைவர் : என். சங்கரன் ; செயலாளர் : ரெ. சா. இளவரசன் ; துணைச் செயலாளர் : எஸ் கௌதமன் ; பொருளாளர் : வெ. லெ இராதாகிருட்டினன் ; செயற்குழு உறுப்பினர்கள் : சுப. மலையப்பன், ஆர். எம். கோவிந்தராசன், எஸ். மார்க்ஸ், ஆர். ரவி, எஸ். இராசமாணிக்கம், ச பெரியசாமி, ந. செயராமன், என். பாலு, ஜி நடராசன், எஸ் சந்தானம், ஆர். இராமசாமி.

புதுவை வட்ட கிளைகட்கு :

புதுவை பெருநகரப் பகுதியிலும், சுற்றியுள்ள ஏழு கொம்யூன்களிலும் நடத்தப்பட்ட கிளைக் கழகத் தேர்தல் முடிவுகள் சரிவர வட்டக் கழகத்துக்கு அனுப்பி வைக்கப்படாததால், சில கிளைகளின் முகவரிகள் இல்லை. இதனால் தேர்தல் பற்றிய தகவல் தெரிவிக்க இயலாமற்போய்விடும் ; எனவே உடன் கீழ்க்கண்ட முகவரிக்கு தேர்தல் முடிவுத் தாளை அனுப்பிவைக்க வேண்டுகிறேன்.

முகவரி :—'எம். ஏ. சண்முகம், வட்டச் செயலாளர், 36, சி, காந்தி வீதி, புதுவை.

வட்டக் கழக அலுவலகத்தில் மாலை 5 முதல் இரவு 8-50 மணி வரை சந்திக்கலாம். தொலைபேசி எண் 717' என்று புதுவை வட்டச் செயலாளர் அறிவிக்கிறார்.

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

சுற்றுப்பயணம்

ஜுன் 23 : பொள்ளாச்சி ; 24 : கோயமுத்தூர் ; 25, 26, 27 : தென்காசித் தொகுதி இடைத் தேர்தல் பணி ; 28 : புதியம்புத்தூர் ; 29 : ஏரல் ; 30 : சோழவந்தான்.

பிறப்பு

பரமத்தி சண்முகம் அவர்களின் துணைவியார் பூங்கோதைக்கு 14—6—68 அன்று ஓர் பெண் மகவு பிறந்து, தாயும் சேயும் நலம்.

செந்தமிழ்க் கவிஞர் எழுத்தாளர் பேரவை

தமிழக அரசுக்குப் பாராட்டு

சென்னை செந்தமிழ்க் கவிஞர் எழுத்தாளர் பேரவையின் 4-வது செயற்குழுக் கூட்டம், 16-6-68-ல், பேராசிரியர் டாக்டர் சி. இலக்குவனர் தலைமையில் கூடி, கீழ்க்கண்ட முடிவுகளை ஒருமனதாக நிறைவேற்றியது :—

பேராசிரியர் டாக்டர் சி. இலக்குவனர் அவர்களைத் தமிழக அரசு உஸ்மானியா பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவராகப் பரிந்துரை செய்து அவர்கள் பதவி ஏற்கும் செய்தியைக் கேட்டு, பேரவையின் துணைத் தலைவர் காஞ்சி. மணிமொழியார், பேராசிரியருக்கு மலர் மாலை அணிவித்துப் பாராட்டினர். திரு. அ. கி. பரந்தாமனரும் பாராட்டுரை வழங்கினர்.

தமிழக அரசின் முதல்வர் அண்ணா அவர்கள் அமெரிக்கா முதலிய நாடுகளின் பல்கலைக் கழகங்களுக்குத் தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம் முதலிய நூற்களை வழங்கி, தமிழகத்தின் சிறப்பினையும் தமிழ் மொழியின் தொன்மையையும் விளக்கி வெற்றிச் சிறப்புடன் திரும்பியதற்கு இப்பேரவை தனது மகிழ்ச்சியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறது; அதே போன்று அமைச்சர் டாக்டர் சத்தியவாணிமுத்து அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறது.

பேரவையின் தலைவர் பேராசிரியர் டாக்டர் சி. இலக்குவனர் வேறு இடத்திற்குச் சென்றாலும் அவரே என்றும் தலைவராய் இருத்தல் வேண்டும் எனவும், பேரவையின் செயல்களைக் கவனிக்கத் துணைத் தலைவர் திரு. காஞ்சி. மணிமொழியார் அவர்களைப் பொறுப்புத் தலைவராய்த் தேர்ந்தெடுத்தனர்.

பேரவையின் செயற்குழு உறுப்பினர்களில் ஒருவரான திரு. ஏ. பி. சனார்த்தனம் அவர்களையும், தமிழ்ப் பண்பாளர்கள் திரு. டி. கே. சண்முகம், திரு. டி. வி. நாராயணசாமி ஆகியவர்களையும் தமிழக அரசு மேலவையின் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுத்தமைக்குத் தமிழக அரசுக்குத் தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

பேரவையின் சார்பில் கருத்தரங்குகளையும் கவியரங்குகளையும் ஏற்பாடு செய்யும்படியும், மேலும் கட்டுரைப் பயிற்சி — கவிதைப் பயிற்சி — பேச்சுப் பயிற்சி ஆகிய வகுப்புக்களையும் பேராசிரியர் அ. கி. பரந்தாமனார், பேராசிரியர் ந. சஞ்சீவி, திரு. ஏ. பி. சனார்த்தனம் ஆகியோர் கொண்டு ஏற்பாடு செய்யும்படிச் செயலாளரைக் கேட்டுக்கொண்டது. ஜுலை 21-ம் நாள்முதல் கருத்தரங்கும், கவியரங்கும் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

மறைவு

கள்ளக்குறிச் வட்ட தி. மு. க. துணைச்செயலாளர் மு. பாண்டியனின் துணைவியார் 15—6—68-ல் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு இயற்கையெய்தினர் என்ற செய்தி வருத்தத்துடன் அறிவிக்கப்படுகிறது.

அமைச்சர் மதியழகன் வீட்டுத் திருமணம்

அறிஞர் அண்ணா தலைமையில் ஆன்றோர்கள் வாழ்த்தினர்

சென்னை, ஜுன் 21—

தமிழக உணவுத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. மதியழகன் அவர்களின் அண்ணன் மகன் செல்வன்: செல்வராசுக்கும்—தமிழகப் பொதுநலத் துறைத் துணைச் செயலாளர் திரு. கே. சிதம்பரம் அவர்களின் மகள் செல்வி: மீனுவுக்கும் நேற்று முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது.

3,000 ஏழைகட்கு உணவளிப்பு

தேனாம்பேட்டையில் உள்ள ஆபட்ஸ்பரி மாளிகையில் நடைபெற்ற இத்திருமண விழாவையொட்டி நேற்று நண்பகல் — அமைச்சர் மதியழகன் அவர்களால் — தீ விபத்தால் பாதிக்கப்பட்ட ஏழைக் குடிசைவாழ் மக்கள் மூவாயிரம் பேர்கட்கு உணவளிக்கப்பட்டது.

மண விழாவில் ஏராளமான சழகத் தோழர்களும், நகரப் பிரமுகர்களும், நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்களும், அரசியல் கட்சித் தலைவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

அனைவரையும் அமைச்சர் மதியழகன் வரவேற்று அண்ணா அவர்களைத் தலைமை தாங்கித் திருமணத்தை நடத்தித் தருமாறு கேட்டுக்கொண்டார்.

மணவிழாத் தலைமையினை ஏற்று பேரறிஞர் அண்ணா அவர்கள் பேசுகையில் கூறியதாவது:—

"கழகத் தோழர்கள் யாருடைய இல்லத்தில் திருமணம் நடந்தாலும் நமது தோழர்கள் அனைவரும் மகிழ்ச்சியடைவது, கழகத் தோழர்கள் கொண்டுள்ள பற்றுதலைக் காட்டுவதாகும், கழகத்தின் பாங்கும் அத்தகையது!

நண்பர் கே. ஏ. மதியழகனுக்கு முன்னமேயே கணியூர் முருகேசன், இயக்கத்திற்கு மிகச் சிறந்த தொண்டாற்றியவர். குடும்பம் முழுவதையும் இயக்கத்தில் அவர் பங்குபெறச் செய்தார்.

"இன்று வாழ்க்கையைத் துவங்குகிற மணமக்கள், இங்குள்ள நல்லோரின் நல்வாழ்த்துக்களைப் பெற்று பிற குடும்பங்கட்கு வழிகாட்டியாகவும், வாழ்கிற நாடு ஏற்றம் பெறும் வகையிலும் நம் கொள்கைகட்கு ஊட்டம் ஏற்படுகிற வகையிலும் வாழ்ந்து காட்ட வேண்டுமென வாழ்த்துகிறேன்.

"மற்ற பல சமுதாயங்களுக்கு முன்னர், தமிழர்கள், இல்லற நெறியை வகுத்தனர்; 'இல்லறமே நல்லறம்' என்றனர். அது தமிழகத்தின் தனிச் சிறப்பு

"குடும்பங்கள் நல்ல முறையில் இயங்கினால், சமுதாய ஒழுங்கு ஏற்படும்; அப்படிப்பட்ட சமுதாய ஒழுங்கினை ஏற்படுத்த ஒரு புதிய குடும்பம் இன்று வருகிறது. மணமக்கள் குதூகலமான முறையில் சீரிய வாழ்க்கை வாழ வேண்டுமென வாழ்த்துகிறேன்."

பின்னர் அறிஞர் அண்ணா அவர்கள் மாலையை எடுத்துக்கொடுக்க மணமக்கள் மாலை மாற்றிக்கொண்டனர். மணமக்களுக்கு மங்கல நாண் சூட்டப்பட்டது.

மணமக்களை வாழ்த்தி, தமிழவேள் பி.டி. இராசன், அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, ஏ. கோவிந்தசாமி, சாதிக் பாட்சா, சத்தியவாணி முத்து, மற்றும் பேராசிரியர் க. அன்பழகன், ம.பொ. சிவஞானம் எம்.எல்.ஏ., சி. பி. சிற்றரசு எம்.எல்.சி., என்.வி. நடராசன் எம்.எல்.சி., கி. மனோகரன் எம்.பி, 'விடுதலை' ஆசிரியர் கி. வீரமணி, காஞ்சி நகராட்சித் தலைவர் ஏ.கே. தங்கவேலர், சென்னை மேயர் டாக்டர் அபிபுல்லா பேக், எஸ். மாரிசாமி எம்.பி., ஏ.வி.பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., மதுரை எஸ் முத்து எம்.எல்.சி., பொள்ளாச்சி கண்ணப்பன் ஆகியோர் பேசினர்.

திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அனைவருக்கும் நன்றி நவின்றார்.

திருமண நிகழ்ச்சி முடிந்ததும் பாலன் பிக்சர்ஸார் தயாரித்த அண்ணா அமெரிக்கப் பயண வழியனுப்பு விழா முதல் பல்வேறு முக்கிய நிகழ்ச்சிகளை அடங்கிய திரைப்படம் திரையிட்டுக் காட்டப்பட்டது.

இரவு, செல்வி சந்திரகாந்தா குழுவினரின் 'பொன்னியின் செல்வி' நாட்டிய நாடகம் நடைபெற்றது.

நாமக்கல்

தி. மு. க. கிளை தேர்தல்

7—7—68-ல் நடைபெறும்

சேலம் மாவட்டம் நாமக்கல் தி. மு. க. கிளையின் தேர்தல், 7—7—68 ஞாயிறு காலை 10 மணிக்கு, தலைமைக் கழகச் சார்பான ஆணையாளர் தோழர் கோ. செங்குட்டுவன் (பொதுக் குழு உறுப்பினர்) அவர்கள் தலைமையில் நடைபெறும்.

இடம் பின்னர் அறிவிக்கப்படும்.

— தலைமைக் கழகம் (தி மு.க.)

சாலை இளந்திரையனார் தமிழகச் சுற்றுப்பயணம்

கோவைத் தமிழன்பர்கட்கு வேண்டுகோள்

தமிழகச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள டில்லிப் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் திரு. சாலை இளந்திரையன், திருமதி சாலினி இளந்திரையன் இருவரும் ஜுன் 25-ம் நாள் கோவை வந்து சேருகிறார்கள்.

ஜுன் 26, 27, 28, 29, 30-ஆகிய நாட்களில்—கோவை, பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, பழனிப் பகுதிகளில் தமிழ் அன்பர்களையும், அறிஞர்களையும், பொது நலத் தொண்டர்களையும் சந்திக்கிறார்கள்.

அவர்களைக் கண்டு பேச விரும்பும் அன்பர்களும், நிறுவனத்தினரும், 'திரு. கு. சண்முகசுந்தரம், 70, அருணாசலம் வீதி கிழக்கு, கோவை-2' அவர்களோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தேர்தல் நிதி

		ரூ. காசு
5-6-68 இதழ் விவரப்படி		1,50,258 79
கழகப் பொருளாளர் மு கருணாநிதி அவர்கள் 8-6-68 அன்று கலந்துகொண்ட நெல்லை வட்டக் கிளைகளின் நிகழ்ச்சிகளில் அளிக்கப்பட்ட தொகை		12,330.01
கழகப் பொருளாளர் கருணாநிதி அவர்கள் 9-6-68 அன்று கலந்துகொண்ட திருச்சி பிறந்த நாள் நிகழ்ச்சியில், அன்னாரிடம் மாலைக்குப் பதிலாக அளிக்கப்பட்ட தொகை		175.00
அமைச்சர் திரு. முத்துசாமி அவர்கள் கலந்துகொண்ட சேலம் மாவட்டக் கழக நிகழ்ச்சிகளில் ஆங்காங்கு (ஏற்கனவே அறிவிக்கப்பட்ட விவரப்படி) அளிக்கப்பட்டு 9-6-68 அன்று திருச்சியில் பிறந்த நாள் விழா நிகழ்ச்சியில் பொருளாளரிடம் அளிக்கப்பட்ட தொகை		1,324.10
வழக்கறிஞர்கள் சங்கச் சார்பில் தஞ்சை வழக்கறிஞர் திரு. மாணிக்கவாசகம் அவர்கள் கழகப் பொருளாளரிடம் அளித்த தொகை		1,000 00
திண்டிவனம் தோழர் டி. ஏ. எஸ். பாலன் அவர்கள் பொருளாளரிடம் அளித்தது		101.00
கொரடாச்சேரி ஒபுளியப்பன் சார்பாகப் பொருளாளரிடம்		100.00
குழந்தைகளுக்குப் பொருளாளர் அவர்களால் திண்டிவனம் நிகழ்ச்சியில் பெயர் சூட்டிய வகையில்		7.00
அமைச்சர் செ. மாதவன் அவர்கள் மூலம்—		
உதகை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மாதா கவுடர் அவர்களால்	100.00	
மதுரை அழகர்கோவில் அய்யாச்சாமி	1.00	
திருப்பத்தூர் (வ. ஆ.) 9-வது வார்டு கிளையின் சார்பாக	25.00	
மின்பாறை தி. மு. க. கிளை சார்பாக	5 00	131.00
அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் மூலம்—		
மேலூர் கிளையின் சார்பாக	37.04	
குழந்தைகளுக்குப் பெயர்சூட்டிய வகையில்	10.00	47 04
அமைச்சர் செ. மாதவன் அவர்கள் 10-6-68 அன்று கலந்துகொண்ட கள்ளக்குறிச்சி கூட்டத்தில் வசூல்—தோழர் பச்சையப்பன் மூலம்		35.20
ஆக மொத்தம்		1,65,509.14

நடக்க இருப்பவை

22-6-68

சென்னை 8-வது வட்டம்

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு இராயபுரம் ஆதம் சாயபு தெருவில் (காவல் நிலையம் அருகில்); தலைவர்: சு. இராமதாசு; பேசுவோர்: அமைச்சர் மா. முத்துசாமி, மு. வேதாசலம் எம்.எல்.ஏ., என். வி. என். செல்வம், தி. ந. மதிவாணன், சி. இளங்கோ, இரா. மு. மனோகரன்.

செருமாவிலங்கை

தி. மு. க. துவக்க விழா; மாலை 6-மணிக்கு வாஞ்சாற்றுப் பாலத்திற்கு அருகில்; தலைவர்: என். சண்முகம்; பேசுவோர்: வழக்கறிஞர் எஸ். இராமசாமி, ஏ. அப்துல் முகம்மது, கோ. சத்தியமூர்த்தி. (திருநள்ளாறு நடராசன் குழுவினரின் பல குரல் கலை நிகழ்ச்சி உண்டு)

பெங்களூர்

12-வது வட்ட தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு இராமச் சந்திரபுரம் முதல் வீதியில்; தலைவர்: அ. சாமிதுரை; பேசுவோர்: எஸ். என். நாராயணன், சிவசங்கரன், இராமசாமி, த. அறவாழி, ஆர். டி. கங்காதரம், (மறைந்த தோழர் மு. அன்பழகன் குழந்தைகட்கு தி. திராவிட மணி, கல்வி நிதியளிப்பார்.)

ஆலந்தூர்

கருணாநிதி மன்றச் சார்பில் மாலை 7-மணிக்கு மண்டித் தெருவில்; தலைவர்: எம. சி. மதன கோபால்; பேசுவோர்: டி. கே. சீனிவாசன், எஸ். பாலன், இரா. கோதண்டராமன், இர. மோகனரங்கம், எஸ். வேணுகோபால், ஆர். எஸ். பாரதி, கோ. மோகனன், கோ. நீலகண்டன்.

தஞ்சை

23-வது வட்ட தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு வாடிவாசல் கடைத் தெரு அருகில் உள்ள முஸ்லிம் தெருவில்; தலைவர்: ந. பஞ்சநாதன்; பேசுவோர்: கோ. சி. மணி எம்.எல்.ஏ., எஸ். நடராசன் எம்.எல்.ஏ., [illegible] சுல்தான் எம்.சி., கிருஷ்ணமூர்த்தி [illegible], ஏ. ஆர். பாபு.

23-6-68

அரியபெருமானூர்

தி. மு. க. பணிமனைத் திறப்பு விழா; மாலை 5-மணிக்கு அழகிரி திடலில்; தலைவர்: எஸ். பி. பச்சையப்பன் எம்.எல்.ஏ.; வரவேற்பாளர்: டி. கேசவலு எம்.எல்.ஏ.; திறப்பாளர்: புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன்; கொடியேற்றுபவர்: மு. அண்ணாமலை; அண்ணா படத் திறப்பு: பா. உ. சண்முகம் எம்.எல்.சி.; காந்தி படத் திறப்பு: மு. தெய்வீகன் எம்.பி.; வள்ளுவர் படத் திறப்பு: க. வேலாதம்.

நெய்வேலி

தெற்கு மேலூர் தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு திரு. வி. க. திடலில்; தலைவர்: மு. இரா. குமார்; பேசுவோர்: பேராசிரியர் க. அன்பழகன் எம்.பி., எம். செல்வராசு, எஸ். இராமச்சந்திரன் எம்.எல்.ஏ., க. நாராயணசாமி, பி. வி. சீனிவாசன், ச. ஆண்டகுருநாதன், இரா. அரிகரன்.

செம்பட்டையம்

தி. மு. க. சார்பில் மாலை 7-மணியளவில் பாவடித் திடலில்; தலைவர்: ம. வையாபுரி; பேசுவோர்: இ. எம். நடராசன் எம்.எல்.ஏ., ஜி. பி. வெங்கிடு எம்.சி., சிவ. நடராசன், மா. பெ. அம்மையப்பன், இரா. செங்குட்டுவன், அ. வெற்றிவேல், அ. க. துரைராசு, எஸ். கே. வேடப்பன்.

வீரப்பன்சத்திரம்

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு மாரியம்மன் திடலில்; தலைவர்: மா. நஞ்சப்பா; பேசுவோர்: பி. ஏ. சாமிநாதன் எம்.பி., மு. சின்னசாமி எம் எல் ஏ., க. அன்பரசு, ப. ச. விசுவநாதன், செ. அரங்கராசன் எம்.சி., மா. சுப்பிரமணியம், திருமதி சேதுபாஸ்கரன்.

வங்கத் தமிழர் சங்க

அண்ணா மணிவிழா மலர்க்குழு

முதலமைச்சர் அண்ணாவுடன் சந்திப்பு

சென்னை, ஜுன் 21—

கல்கத்தாவில் உள்ள வங்கத் தமிழர் சங்கத்தின் அண்ணா மணி விழா மலர்க் குழுவினர் நேற்று காலையில், முதலமைச்சர் அண்ணா அவர்களை அவருடைய இல்லத்தில் சந்தித்து, மலர் மாலைகள் அணிவித்து, அண்ணாவின் உலகச் சுற்றுப்பயணம் வெற்றிகரமாக முடிந்தது குறித்து மகிழ்ச்சி தெரிவித்துக்கொண்டனர்.

வங்கத் தமிழர் சங்கத் துணைச் செயலாளர் செ. வீரபத்திரன், மற்றும் மலர்க்குழு உறுப்பினர்களான சலகண்டபுரம் ப. கண்ணன், சா. கணேசன் எம்.சி., கா. பன்னீர்செல்வம் (தமிழ், உழைத்தார் சங்கப் பொதுச் செயலாளர்), சாலை இளந்திரையன் தம்பதிகள் (டில்லி) ஓவியர் மா. முத்து, லாடனேந்தல் பொ. நாராயணன் ஆகியோர் இக்குழுவில் இருந்தனர்.

அனைவரையும் அண்ணா அவர்கள் அன்புடன் வரவேற்று அளவளாவினர்கள்.

வங்கத் தமிழர் சங்கப் பணிகள் குறித்தும், மணிவிழா மலர் குறித்தும் அண்ணா அவர்களிடமும், உணவு நிறுந்த கல்வி — தொழில் அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்களிடமும் குழுவினர் எடுத்துரைத்தனர்.

நாகையில்

எஸ். எஸ். ஆர். கலை நிகழ்ச்சி

இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் அவர்களின் வில்லுப்பாட்டுக் கலைநிகழ்ச்சி 23-6-68 மாலை 10 மணிக்கு நாகை பாண்டியன் அரங்கில், மன்னை நாராயணசாமி தலைமையிலும் — முத்துப்பேட்டை ந. தர்மலிங்கம் எம். எல் ஏ., முன்னிலையிலும் நடைபெறும்.

நன்கொடை: ரூ. 10; 5; 2; 1; பெண்களுக்கு 50 காசு.

முத்துப்பேட்டையில்

இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் அவர்களின் 'அண்ணாவும் அரசும்' என்ற வில்லுப் பாட்டுக் கலைநிகழ்ச்சி 23-6-68 இரவு 7 மணிக்கு முத்துப்பேட்டை கணபதி தேவர் வாடியில், மன்னை நாராயணசாமி அவர்கள் தலைமையில் நடைபெறும்.

நன்கொடை: ரூ. 25; 10; 5; 75 காசு. பெண்களுக்கு 50 காசு.

க. அன்பரசு

சுற்றுப்பயணம்

ஜுன் 22: பல்லடம்; 23: வீரப்பன் சத்திரம்; 24: கோபி; 29: ஆத்தூர்; 30: குளித்தலை.

ஜுலை 4, 5: ஆத்தூர்; 6: கரூர் 15-வதுவட்டம்; 7: பசுபதிபாளையம்.

சென்னை மாநகராட்சிக்கு மாநில அரசு மானியம்

சென்னை, ஜுன் 21—

பூவிருந்தவல்லி நெடுஞ்சாலை, மல்சசாலை, திருவொற்றியூர் நெடுஞ்சாலை ஆகிய இடங்களில் தற்போதுள்ள மின் விளக்கு வசதியை இன்னும் மேம்பாடு செய்யும் பணிகளுக்காக, சென்னை மாநகராட்சிக்கு, ரூ 4-இலட்சம் தமிழக அரசு அனுமதித்திருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியீட்டாளராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.